[1973 மார்ச் 26

இணைப்பு I

[ஆம் பக்கத்தில் 266 ஆம் எண்ணுள்ள உடுக்குறியிடப்பட்ட வினாவின் விடையைக் காண்க.]

1. No information is available as to whether there is any private medical college in Allopathic Medicine actually giving postal tuition in this State.

2. However, in this connection it may be stated that one Thiru G. T. Raja, Medical Practitioner, No 8, Kaziar Thope, 7th Lane, South Veli Street, Madurai has drawn attention of the Government to an advertisement in the daily 'Thina Thanthi' dated 13th April 1972 that the Allopathy Medical Training Centre, No.30, Nallappa Vathiar Street, Madras, is giving Allopatic Practical Training with the aid of Government from 15th May 1972 to 24th May 1972. He has enquired whether the certicate issued, by the above institution can be recognised by the Government. The matter was enquired into and the paper notification is found to be false as no permission was given by the Government. The matter, has, therefore, been referred to the Inspector-General of Police and he has been requested to take immediate action in the matter and report the result to Government very expeditiously.

இணைப்பு II

[26-ஆம் பக்கத்தில் 263 ஆம் எண்ணுள்ள உடுக்குறியிடப்பட்ட வினாவின் விடையைக் காண்க.]

காற்றின் தூய்மை எவ்வாறு கெடுகிறது என்பது குறித்தும், அவ்விதம் கெடுவதற்கு பலதரப்பட்ட செயற்கருவிகள் யாவை என்பது குறித்தும் முழுமையாக ஆய்ந்து முதற்கட்டமாக சென்னை மாநகரில் காற்றின் தூய்மை கெடுவதை தடுப்பதற்காக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து சீரான நடைமுறைக்கு ஏற்ற ஆலோசனைகளைக் கூறும் பொருட்டு ஒரு குழுவினை அரசு அமைத்துள்ளது. அக்குழுவின் அறிக்கை கிடைக்கப்பெற்று அது அரசின் பரிசீலனையில் உள்ளது.

2. சுகாதாரக் கேடு பயக்கக்கூடிய புகையை வெளித்தள்ளுகிற பேருந்து வண்டிகளின் உரிமையாளர்கள் தமிழ் நாடு பேருந்து வண்டிகள் சட்டம், 1940 சட்டம் 323-ன் கீழ் தண்டிக்கப்படுகிறார்கள். பேருந்து வண்டிகள் சட்டம் 112-ம்

1973 மார்ச் 26]

பிரிவைக் காண்க. சனவரி 1972-முதல் ஆகஸ்டு 72 வரை அவ்வகையான 4,584 வாகனங்களின் உரிமையாளர்கள் குற்றஞ்சாட்டப்பட்டு இதுவரை ரூபாய் 5 முதல் 50 வரை தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறார்கள். காவல் துறையினரால் ரூபாய் 12,542 அபராதத் தொகையாகத் திரட்டப்பட்டிருக்கின்றது. சுகாதாரக் கேடு பயக்கக்கூடிய புகையை வெளித்தள்ளுகிற அரசினர் போக்குவரத்தைப் பொருத்தவரையில் காவல்துறை ஆணையாளர் மாநில போக்குவரத்துத் துறை இயக்குநரின் நடவடிக்கைக்காக ஓர் அறிக்கையை அனுப்பியுள்ளார். மேலும் தொழிற்கூடம் மற்றும் வேறு கழிவுப் பொருள்களால் தண்ணீர் கெடுகின்ற பிரச்சினையினைச் சமாளிக்க தண்ணீர் மற்றும் கழிவுநீர் தூய்மை படுத்தும் குழு ஒன்று இயங்கி வருகிறது. இக்குழு சமீபகாலத்தில் திருத்தி அமைக்கப் பெற்றுள்ளது. இக்குழு சுகாதாரக் கேடு பயக்கக்கூடிய அனைத்துக் கூறுகளையும் கண்காணித்துக்கொள்ளவும் இம் மாநிலத்தில் புதிய தொழிற்சாலைகள் துவங்க உரிமைகள் வழங்கும் காலத்தில் அரசினரால் கலந்தாலோசிக்கப்படுகின்ற செயற் கருவியாக செயல்படவும் உரிய அதிகாரங்கள் படைத்த ஒரு நிரந்தர மான குழுவாகவும் செயல்படும்.

இணைப்பு III

[38 ஆம் பக்கத்தில் இனம் 4-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறநிலையச் சட்ட நிர்வாகம்.

"ஒல்லும் வகையால் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாம் செயல்"

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாய்மொழிக்கிணங்க அறவினையை பன் னெடுங்காலத்திற்கு முன்பே தொடங்கி வைத்து, இன்றளவும் இடையறாது நடைபெற்றிடும் வழியில் அறநிலையங்களையும், அறக் கட்டளைகளையும் முறை மையின் காத்து, அவைகளின் மூலம் சமுதாயத்திலே சமதர்ம மணங்கமழச் செய்து வரும் பழந்தமிழ் நெறிநின்று செயல்படும் இந்து சமய அறக்கட்டளை கள் (நிர்வாக) துறை பற்றிய குறிப்பு.

வரலாற்றுச் சிறப்பையும், வழிபடுவோர் போற்றும் சமயச் சிறப்பையும் ஒருங்கே பெற்று ஒளிர்கின்ற கற்றளிகளும், கவின்மிகு திருக்கோயில்களும் நாளும் நற்றமிழ் வளர்த்திடும் நன்மடங்களும் நிறைந்தது தமிழ்நாடு. முடி யுடை மூவேந்தர் காலம் தொடங்கி இன்றளவும் முறைமையான ஓர் வரலாறு கிடைத்திட தமிழர்க்கு உறுதுணை பயப்பவை தமிழகத் திருக்கோயில்கள்தான். வரலாற்றுச் சான்றுகளாகவும், வழிபடுவோர்தம் குறை நீக்கும் இறைவன் உறைவிடங்களாகவும் கருதப்படும் கலைமாட்சி மிக்க இத்திருக்கோயில்களைப்